# மெட்ரோ நிலையங்களில் மீண்டும் ஆட்டோ வசதி

சென்னை, பிப். 18–

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து, பயணியர், வெளியிடங்களுக்கு விரைவாக செல்வதற்கு ஏதுவாக, எட்டு நிலையங்களில், குறைந்த கட்டண ஆட்டோ வசதி, நேற்று முதல் மீண்டும் துவங்கப்பட்டுள்ளது.

திருமங்கலம், கோயம்பேடு, ஈக்காட்டுதாங்கல், அசோக்நகர், கிண்டி, சின்னமலை, பரங்கிமலை மற்றும் ஆலந்துார் மெட்ரோ நிலையங்களில், நேற்று முதல், காலை, 8:00 மணியில் இருந்து, இரவு, 8:00 மணி வரை குறைந்த கட்டண ஆட்டோ வசதி செய்யப்பட்டுள்ளது.

பயணியர், 10 ரூபாய் கட்டணம் செலுத்தி, இந்த ஆட்டோக்களில் பயணம் செய்யலாம்.